22 JAN 1982

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1981 மார்ச் 3
மாசி 20, ரௌத்திரி—திருவள்ளுவர் ஆண்டு 2012,

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

" கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு ".

செய்யும் செயல் வேறாகவும் சொல்லும் சொல் வேறாகவும் உள்ளவரின் நட்பு, ஒருவருக்குக் கனவிலும் துன்பம் தருவதாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 336, 337 ஆகியவை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளிவைக்கப்பெறுகின்றன.

காமராஜ் வாழ்க்கை வரலாறு பற்றிய ஒலி-ஒளிக் காட்சி.

*வினா எண். 338—திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் வண்ணம் ஒலி-ஒளிக் காட்சி ஏற்பாடு செய்ய குறிப்பு ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) (ஆ) மற்றும் தற்சமயம் இல்லை.

1981 மார்ச் 3

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, கல்விக் கண் கொடுத்த கருணை தெய்வமாகவும் ஏழைப் பங்காளனாகவும் தனக்கென வாழாது பிறருக்கென வாழ்ந்து காட்டிய பெருந் தலைவர் அவர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் வகையில் ஒலி-ஒளி காட்சி தற்போது இல்லாவிட்டாலும் கூட எதிர்காலத்திலே அமைத்துக்காட்டுவதன் மூலமாக வருங்கால சந்ததியினர் அவரைப்பற்றிப் புரிந்து கொள்ளக்கூடிய நல்வாய்ப்பை அரசு ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இரண்டு ஆண்டுகளாக தந்தை பெரியார் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை ஒலி-ஒளி அரங்குக் காட்சிகளாக நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு இறுதியிலே மகா கவி பாரதியாரின் நூற்றாண்டு விழா நடக்கிற காரணத்தினாலே அவருடைய வாழ்க்கை வரலாற்றை ஒலி-ஒளி அரங்குக் காட்சியாக நடத்துவதற்குத் திட்டமிட்டு இருக்கிறது. தொடர்ந்து எதிர்காலத்திலே அவசியம் ஏற்படுகிறபோது தமிழகத்தின் பெருந்தலைவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை ஒலி-ஒளி அரங்கு காட்சிகளாக நடத்தலாம். மாண்புமிகு உறுப்பினரும் இன்னொரு வேண்டுகோளை மத்திய அரசுக்கு தெரிவிக்கலாம் என்று நினைக்கிறேன். மத்திய அரசிடத்திலே இப்படிப்பட்ட ஒரு அமைப்பு இருக்கிறது. அவர்கள் இத்தகைய தலைவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை ஒலி-ஒளி காட்சிகளாக அமைக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தால் அது பலனுள்ளதாக இருக்கும்.

திரு. கோவைத்தம்பி : தலைவர் அவர்களே, இந்த ஒலி-ஒளி காட்சிகளை நடத்துவதற்கு மறைந்த தலைவர்களைத் தேர்ந்தெடுக்க அமைச்சர் அவர்கள் ஏதாவது முறைகள் வைத்திருக்கிறார்களா ? இல்லை என்று சொன்னால் பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஒலி-ஒளி காட்சியாக அமைப்பதற்கு அரசு முன்வந்து இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஒலி-ஒளி அரங்குக் காட்சிகளை நடத்துவதற்கு முறைகள் வகுக்கப்படவில்லை. நூற்றாண்டு விழா காண்கிற மாபெரும் தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஒலி-ஒளி அரங்குக் காட்சியாக நடத்துவது அவசியம் என்று கருதி அரசு தேர்ந்தெடுக்கிறது. அந்த வகையில் தலைவர்களுடைய நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. அறிஞர் அண்ணா அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றுக் காட்சிகளை நடத்துவதற்கு அப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்படுகிறபோது அதையும் அரசு பரிசீலிக்கும்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மகா கவி பாரதியினுடைய வாழ்க்கை வரலாற்றை ஒலி-ஒளி காட்சியாக

நடத்துவதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி நடத்துகிறபோது தமிழகத்தின் தலைநகர்கள் அனைத்திலும் அந்தக் காட்சியை நடத்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, அப்படி உருவாக்கப்படுகிற ஒலி-ஒளி அரங்குக் காட்சிகள் மாவட்டத் தலைநகர்களிலே நடத்துவதற்கு திட்டமிடப்பட்டு நடைபெற்று வருகிறது. தந்தை பெரியார் அவர்கள் ஒலி-ஒளி அரங்குக் காட்சிகள் சென்னையிலே நடைப்பெற்று, திருச்சியிலே நடைப்பெற்று, தஞ்சையிலே நடைபெற்று இப்போது பெரியார் மாவட்டத்திலே நடத்தலாமா என்று ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. துரைராஜ்: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய வாழ்க்கைக்கு பெருமை சேர்க்கும் பொருட்டு நாளதுவரையில் இந்த அரசு என்ன என்ன காரியங்களைச் செய்திருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, ஒலி-ஒளி அரங்குக் காட்சியில் பெருந்தலைவர் அவர்களுடைய வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஏற்பாடு இருக்கிறதா என்பது கேள்வி. அதற்கு நான் தகவல் சேகரித்துப் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன். தனியாகக் கேள்வி போட்டால் என்னென்ன காரியங்களை இந்த அரசு செய்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். நாம் உட்கார்ந்து இருக்கின்ற இந்தச் சட்டமன்றப் பேரவையிலே பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் திருவுருவப் படத்தை இந்த அரசுதான் திறந்து வைத்திருக்கிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஒலி-ஒளிக் காட்சி ஏற்பாடு செய்வது பற்றிக் கேள்வி கேட்டிருந்தேன். நான் வருவதற்குச் சற்றுக் காலதாமதம் ஆகிவிட்டது. நேரு போன்றவர்களுக்கு டெல்லியிலும், தந்தை பெரியார் போன்றவர்களுக்கு சென்னையிலும் ஒலி-ஒளிக் காட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதுபோன்று பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஒலி-ஒளிக் காட்சியை தமிழகத்திலே ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா ? அதற்குத் தக்க விளக்கம் கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஒலி-ஒளிக் காட்சிக்கும், ஒலி-ஒளி அரங்கக் காட்சிக்கும் மிகப் பெரிய வேறுபாடு இருக்கிறது. ஒலி-ஒளி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1981 மார்ச் 3

காட்சிப்படி உருவங்கள் தோன்றாது ; ஒலியிலும், ஒளியிலும் வரலாற்றை உருவாக்குவது. அதற்கு தற்போதைய சூழ்நிலையில கிட்டத்தட்ட 30 இலட்சம் ரூபாயிலிருந்து 40 இலட்சம் ரூபாய் வரையில் செலவாகிறது. அதை ஒரு இடத்திலேயிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றியமைக்க முடியாது ; ஒரு இடத்திலேதான் நிலையாக அமைக்க முடியும். இது டெல்லியிலே இருப்பது. தமிழகத்திலேயும், முன்னாலேயிருந்த மத்திய அரசு நம்முடைய மதுரை மீனாட்சியம்மன் திருக்கோவிலில் அமைப்பதாக உறுதியளித்து, பிறகு மக்களிடமிருந்து சில மாற்றுக் கருத்துக்கள் வந்த காரணத்தால் அது கைவிடப்பட்டது. மாமல்லபுரத்தில் அமைப்பதாகச் சொன்னார்கள். அதைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அது இன்னும் அமைக்கப்படவில்லை. இதற்கிடையில் இந்தியாவிலே, டெல்லிக்கு அடுத்தபடியாக, நம்முடைய மாநிலத்தில் மிகப்பெரிய அளவில் திருமலை மன்னர் மகாலில் அவருடைய வரலாற்றை உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி சுமார் 30 இலட்சம் ரூபாய் செலவில் அற்புதமாக அமைத்து இன்றைக்கு அது மக்களுடைய பாராட்டைப் பெற்று வருகிறது. ஆனால் நாம் இப்பொழுது பெரியார் வரலாற்றை நடத்திக் கொண்டிருப்பது ஒலி-ஒளி அரங்கக் காட்சிகள் ; ஒலியும் இருக்கும், ஒளியும் இருக்கும், அரங்கங்களிலே அங்கங்கே நடிகர்கள் தோன்றுவார்கள். அது பல்வேறு அரங்கங்களிலே அமைக்கப்பெற்று நடத்தப்பெறும். அதுதான் ஒவ்வொரு இடத்திலேயிருந்தும் இன்னொரு இடத்திற்குக் கொண்டு போகின்ற முறை. இதைத்தான் இப்பொழுது நாம் நடத்திக்கொண்டு வருகிறோம். நடத்தலாம் என்ற கருத்தையும் இங்கே தெரிவித்திருக்கிறோம்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஒலி-ஒளிக் காட்சிக்கு ஏற்பாடு செய்வது சம்பந்தமான இந்தக் கேள்வி வரக்கூடிய நேரத்திலே அரசு இந்த அசெம்பிளியிலே பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் படத்தைத் திறந்து வைத்தது குறித்துப் பெருமைப்பட்டுக்கொண்டார்கள் ; நாம் எல்லோரும் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் முகவை மாவட்டத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய பெருந்தலைவர்களுடைய வாழ்க்கையைச் சித்தரிக்கும் ஒலி-ஒளிக் காட்சியை ஆரம்பிக்கின்ற நேரத்தில் எந்தத் தலைநகரத்தில் திறக்கப் போகிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படிப்பட்ட கற்பனை கேள்விக்கு இடமளிக்க முடியாது. ஒலி-ஒளிக் காட்சிக்கு ஏற்பாடு செய்த பிறகு இந்தக் கேள்வி வரலாம்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் திறக்கப்படும் என்று தெரிவித்தார்கள்....

1981 மார்ச் 31

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தலைநகரத்தை அமைச்சரவர்கள் நிர்ணயிக்கவில்லை என்ற கருத்தில் உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள்; இது சிக்கலான கேள்வி.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடுகின்ற பொழுது நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்ற சமயத்தில் தலைவர்களுக்கு ஒலி-ஒளிக் காட்சிக்கு ஏற்பாடு செய்வதாகக் குறிப்பிட்டார்கள். அந்த வரிசையில், தேசியப் போராட்டத்தில் ஈடுபட்ட ஜீவா அவர்களைப் பற்றிய ஒலி-ஒளிக் காட்சியை அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நூற்றாண்டு விழாக் காலத்திலே மட்டும் என்பது மட்டுமல்ல அரசினுடைய கொள்கை. எந்தெந்தத் தலைவர்களுக்கு எந்தெந்தச் சூழ்நிலைகளிலே இப்படிப்பட்ட வரலாற்றுக் காட்சிகளை நடத்த வேண்டும் என்ற அவசியம் வருகிறதோ அந்தச் சூழ்நிலைகளிலே நிச்சயமாக தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த, இந்திய துணைக் கண்டத்திற்குப் பெருமை சேர்த்த எல்லாத் தலைவர்களுடைய நிகழ்ச்சிகளையும் அவசியம் நேருகிற பொழுது, எவ்வளவு பணம் செலவழிக்க முடியும் என்பதையும் கருத்திற்கொண்டு, சூழ்நிலைக்கேற்ப அந்த நிகழ்ச்சிகள் நடத்தப் பெறும்.

திரு. இல. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் தமிழகத்திற்கு மட்டும் அல்ல, அகில இந்தியத் தலைவராகத் திகழ்ந்தார்கள். அவர்களுடைய பிறந்த தினமாகிய ஜூலை மாதம் 15-ஆம் தேதி ஒலி-ஒளிக் காட்சியின் மூலமாக அவர்களது வாழ்க்கை வரலாற்றை மக்களுக்கு விளக்கிக் காட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்குத்தான் முன்னாலேயே பதில் சொல்லியிருக்கிறேன். இந்தக் காட்சியை அமைத்து, உருவாக்கி ஏற்பாடு செய்வதற்கு குறைந்தபட்சம் நான்கு மாதங்களிலிருந்து ஆறு மாதங்கள் வரையில் ஆகிறது. ஆகவே, பாரதியார் அவர்களுடைய நூற்றாண்டு நிகழ்ச்சியையொட்டி இந்த நிகழ்ச்சிகள் உருவாக்கப்பட வேண்டிய பொறுப்பை இந்தக் குழு—இந்தத் துறை எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமிருப்பதால், ஒரே நேரத்தில் இரண்டு நிகழ்ச்சிகளை நடத்துகின்ற சூழ்நிலை இல்லை; அதற்கான பொருளாதார வசதியும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.